# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

## (அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)

## பெசன்ட்நகர், சென்னை–90

## வைகுண்ட ஏகாதசி செய்திக்குறிப்பு

"அஷ்டலட்சுமி திருக்கோயில் " எனப் பொதுவாக வழங்கும் இந்த திருக்கோயில் இந்த நூற்றாண்டின் திருக்கோயில் கட்டிடக் கலையின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது.

வங்கக் கடற்கரை ஓரம் தாமரை ஒன்று மலர்ந்தாற் போல் அடிப்பீடம் 64 கோணங்களில் அமைக்கப்பட்டு அதன் மீது மகாமேருவை அமைத்தது போல் விமான அமைப்பு உள்ளது.

"அஷ்டாங்க விமானம்" என்னும் பழமையான திருமால் கோயில்களுக்கு உண்டான இரட்டை அடுக்கு முறையில் ஆகம விதிகளுக்கு உட்பட்டு, அமைக்கப்பட்டுள்ளது. பாஞ்சராத்ர ஆகமத்தின்படி பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் திருமாலும், திருமாமகளும் திருமணக்கோலத்தில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். மேலும் ஆதி, தான்ய, தைரிய இலட்சுமி சன்னதிகளும், முதல் தளத்தில் கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜய லட்சுமி, வித்யா லட்சுமி சன்னதிகளும், இரண்டாம் தளத்தில் தனலட்சுமியும் அமர்ந்து அருள் புரிகின்றனர்.

தமிழகத்தில் எங்கும் காணக்கிடைக்காத வகையில் திருமாலின் பத்து அவதாரங்களும் தனியாக ஒரு சன்னதியில் ஒருங்கே எழுந்தருளியுள்ளனர்.

கமலவிநாயகர், குருவாயூரப்பன், ஸ்ரீசக்கரத்தாழ்வார், அனுக்கிரக ஆஞ்சநேயர், மருத்துவக் கடவுள் தன்வந்திரி ஆகியோர் அமர்ந்து அருளும் ஸ்தலமாகும்.

இத்திருத்தலம் பிரார்த்தனைகள் செலுத்தும் பிரார்த்தனைத் தலமாகவும், பரிகாரத் திருத்தலமாகவும் திருமணம் கைகூடும் திருமணத் தலமாகவும் விளங்குகிறது.

இத்திருக்கோயிலில் வருகின்ற 29.12.2017 வெள்ளிக்கிழமை அன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அதிகாலை 4.00 மணிக்கு சுப்ரபாத சேவையும் அதனைத் தொடந்து 4.30 மணிக்கு சிறப்பு ஆராதனையும், காலை 5.00 மணிக்கு ஆஸ்தான வாயிலில் சொர்க்க வாசல் திறப்பு நடைபெற உள்ளது. 5.00 மணி முதல் சன்னதிகள் சேவார்த்திகளின் தரிசனத்திற்காக நடை திறக்கப்படும்.

பக்தர்களின் வசதிக்காக வடக்கு பக்கம் நுழைவு வாயிலுக்கு முன்புறம் இருந்தே 'கியூ' வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டணமில்லா சேவையும், கட்டணச் சேவையும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக தைரியலட்சுமி சந்நிதியில் நடைபெறும் அர்ச்சனைக்கு பதிலாக அருள்மிகு ஆதிலட்சுமி, தான்ய லட்சுமி, தைரிய லட்சுமி ஆகிய மூன்று சன்னதிகளிலும் அர்ச்சனை செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற சன்னதிகளில் தரிசனம் மட்டுமே செய்ய இயலும்.பெருமாள், மகாலட்சுமி, அஷ்டலட்சுமிகள் சன்னதி ஆகிய அனைத்து மூர்த்தங்களுக்கும் சிறப்பு அலங்கார ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருந்திரளான மக்கள் வரவை எதிர்பார்த்து வழக்கமான பூஜை நேரங்கள், சுத்தம் செய்யும் நேரங்கள் தவிர பக்தர்களின் வழிபாட்டிற்காக அனைத்துச் சன்னதிகளிலும் இடையூறு இன்றி தரிசனம் செய்ய போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. காவல் துறையினராலும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

பக்தர்கள், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கேற்ப, மற்றவர்கள் தரிசனம் செய்வதற்கு இடையூறு செய்யாவண்ணம் தரிசனம் செய்ய ஒத்துழைக்குமாறும், திருக்கோயில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கனிவுடன் வேண்டுகிறோம்.

எஸ். மதனகோபால், எம்.ஏ., பி.எல்., எம்.ஃபில்.,
செயல் அலுவலர்

மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்